இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**MCOP.No.10/2024 எமசா.1**

பெயர். திரு. சக்திவேல் த/பெ. வெங்கடேசன்

கிராமம். சென்னை வயது. 27

நாள்.05.08.2026 தொழில். சட்ட அலுவலர்

நம்பர். 8248067719

**2026** –ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ந் தேதி **புதன் கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 2ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனத்தின் சட்ட அலுவலர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் உண்மை என கூறப்பட்டவைதான். எனவே நான் தாக்கல் செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு **2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி தாக்கல்** செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் **எமசா.1ன்** முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ. 1 | -- | 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் PY 02 V 6815 என்ற வாகனத்தின் காப்பீட்டு சான்றிழ் | உண்மை நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 07.08.2024 | 1ம் எதிர்மனுதாரர் மற்றும் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் ஆகிய இருவருக்கும் மேற்படி ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமத்தை சமர்ப்பிக்க கோரி எங்களது வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பு மற்றும் பதிவு அஞ்சலக ரசீது | சட்ட அறிவிப்பின் அலுவலக நகல், பதிவு அஞ்சலக ரசீதின் அசல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.3 | -- | மேற்படி அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கு அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| எ.ம.சா.ஆ.4 | -- | மேற்படி அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுனர் சுரேஷ் என்பவர் பெற்றுக்கொண்டதற்கு அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |

இம்மனுவை 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை. இல்லை.**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்களது காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அமுலில் இருந்தது என்று சொன்னால் சரிதான். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் உரிமையாளரே அதை அஜாக்கிரதையாக ஓட்டியவர் என்ற அடிப்படையில் காரணம் என அவர்மீது மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் என்பதால் அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றாலும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டினை 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற அடிப்படையில், முதலில் நாங்கள் செலுத்திவிட்டு அதனை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துகொள்ள கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எங்களது புலன் விசாரணைப்படி மனுதாரர் இம்மனுவில் கூறியவாறு, விபத்து ஏற்பட்டதும் அந்த வித்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனர் என்பதும் தெரியவந்தது என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.05 17:48:20 +0530